பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி-சென்னை - 4

10 01 2026 SATURDAY 7 15 AM
ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. 2047ஆம் ஆண்டுக்குள் இந்தியா, வளர்ச்சியடைந்த நாடாக உருவெடுப்பது உறுதி என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

2. போதைப் பொருள் புழக்கம் இல்லாத இந்தியாவை உருவாக்குவதே மத்திய அரசின் இலக்கு என்று உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

3. உலக தரத்திலான ரயில் சேவையை மக்களுக்கு வழங்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

4. ஈரானில் அரசுக்கு எதிராக போராடுவோர் மீது நடவடிக்கை எடுத்தால், கடும் விளைவுகள் ஏற்படும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.

5. மலேசிய ஓப்பன் பேட்மிண்டன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் பி.வி. சிந்து இன்று சீனாவின் Wang Zhi Yi-யை எதிர்கொள்கிறார்.

>>>>>><<<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையின் கீழ், 2047ஆம் ஆண்டுக்குள் இந்தியா, வளர்ச்சியடைந்த நாடாக உருவெடுப்பது உறுதி என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

பஞ்சாப் மாநிலம், ஜலந்தரில் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு பேசிய அவர், ஒரு வளர்ந்த, தன்னிறைவு பெற்ற மற்றும் தன்னம்பிக்கை கொண்ட தேசத்தை கட்டமைக்கும் இலக்குடன் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக கூறினார்.

இந்தியா, உலகின் வல்லரசாக மாறுவதற்கு முயற்சிப்பது என்பது மற்ற நாடுகளை கட்டுப்படுத்துவதற்கோ, அச்சுறுத்தலுக்கோ அல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

அதிகரித்து வரும் போதைப்பொருள் பழக்கம் குறித்து கவலை தெரிவித்த திரு. ராதாகிருஷ்ணன், இந்த விஷயத்தை மத்திய – மாநில அரசுகள் தீவிர அணுக வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

போதைப் பழக்கத்திற்கு யாரும் அடிமையாக கூடாது என்றும், மற்றவர்களும் அந்த பழக்கத்திற்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் குடியரசு துணைத்தலைவர் வலியுறுத்தினார்.

>>>>>><<<<<<

போதைப் பொருள் புழக்கம் இல்லாத இந்தியாவை உருவாக்குவதே மத்திய அரசின் இலக்கு என்று உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற போதைப் பொருட்கள் புழக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான ஒருங்கிணைப்பு குழுவின் கூட்டத்தில் பேசிய அவர், போதைப் பொருட்களுக்கு எதிராக மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த, நாடுதழுவிய மாபெரும் பிரச்சார இயக்கம் மார்ச் 31ஆம் தேதி தொடங்கப்படும் என்று தெரிவித்தார்.

அடுத்த 3 ஆண்டுகளுக்கு நடைபெறவுள்ள இந்தப் பிரச்சாரம், நாட்டை, போதைப்பொருள் இல்லாத நாடாக மாற்றுவதை நோக்கமாக கொண்டிருக்கும் என்றும் அவர் கூறினார்.

போதைப்பொருட்களுக்கு எதிரான இந்த இயக்கத்தில் மத்திய அரசின் அனைத்து துறைகளும் பங்கேற்கவுள்ளதாகவும், இதற்காக விரிவான முன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு, போதைப் பொருட்களால் உருவாகியுள்ள அச்சுறுத்தலை முறியடிப்பதில் குறிப்பிடத்தக்க வெற்றியை பெற்றிருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

போதைப்பொருட்கள் தயாரிப்பவர்கள் மற்றும் விற்பனை செய்வோர் மீது எந்தவித கருணையும் காட்டப்படக்கூடாது என்பதில் அரசு உறுதியாக உள்ளது என்றும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

>>>>>><<<<<<

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற நிலையை நாடு எட்டும் போது, உலக தரத்திலான ரயில் சேவைகளும் மக்களுக்கு கிடைக்கும் என்று அத்துறைக்கான அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற விழாவில் பேசிய அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு மேற்கொண்ட சீர்திருத்த நடவடிக்கைகள் காரணமாக, ரயில்வே துறையில் பல்வேறு ஆண்டுகளாக நிலவி வந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாக கூறினார்.

பயணிகளின் பாதுகாப்பிற்கு உயர் முன்னுரிமை அளிக்கும் வகையில், நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இதன் விளைவாக விபத்துக்கள் பெருமளவில் குறைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக, ரயில்வே துறையில் சிறப்பாக பணியாற்றிய மண்டலங்களுக்கும், அதிகாரிகளுக்கும் விருதுகளை திரு. அஸ்வினி வைஷ்ணவ் வழங்கினார்.

சிறப்பான சேவையாற்றியதற்காக தெற்கு ரயில்வே-க்கு 3 விருதுகள் இந்நிகழ்ச்சியில் வழங்கப்பட்டன.

>>>>>><<<<<<

ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கைக்குப் பிறகு, பாகிஸ்தான் அவசர கதியில் மேற்கொண்ட ராணுவ மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு, அந்நாட்டில் உள்ள மோசமான நிர்வாகம் இருந்ததை வெளிப்படுத்தியுள்ளதாக முப்படைகளின் தளபதி ஜென்ரல் அனில் சவுஹான் தெரிவித்துள்ளார்.

புனேயில் நேற்று நடைபெற்ற பாதுகாப்புத்துறை தொடர்பான நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கைக்குப் பின்னர், பாகிஸ்தான் மேற்கொண்ட சில நிர்வாக சீரமைப்பு நடவடிக்கைகள், அந்நாட்டின் பாதுகாப்பு துறையில் உள்ள குளறுபடிகளை வெளிப்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டார்.

தற்போது, பாகிஸ்தானில் ராணுவம் மற்றும் அரசு நிர்வாகத்திற்கு இடையே ஒருங்கிணைப்பு இல்லை என்றும் அவர் கூறினார்.

ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கையை இந்தியா, தற்காலிகமாகவே நிறுத்தியுள்ளது என்றும் ஜென்ரல் அனில் சவுஹான் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

ஹிமாச்சலப்பிரதேசத்தில் நேற்று நிகழ்ந்த பேருந்து விபத்தில் 14 பேர் உயிரிழந்தனர், 33 பேர் காயமடைந்தனர்.

Sirmaur மாவட்டத்தில் உள்ள மலைப் பகுதியில் பேருந்து கவிழ்ந்ததால், இந்த விபத்து ஏற்பட்டது.

காயமடைந்தவர்கள், சிம்லாவில் உள்ள அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அவர்களுக்கு போதிய மருத்துவ சிகிச்சை அளிக்க, முதலமைச்சர் திரு. சுக்விந்தர் சிங் உத்தரவிட்டுள்ளார்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து தலா 2 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்றும், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

இந்த விபத்து குறித்து, குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் ஆகியோரும் வேதனை தெரிவித்துள்ளனர்.

>>>>>><<<<<<

ஈரானில் அரசுக்கு எதிரான போராட்டங்கள், பல்வேறு நகரங்களுக்கும் பரவியுள்ளது.

இதன் காரணமாக, நாடுமுழுவதும் இணையசேவை மற்றும் தொலைபேசி இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

அந்நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த நிலையில், அத்தியாவசிய பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால், தலைநகர் டெஹ்ரானினல் அரசியல் கட்சியினரும், மாணவர்களும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அப்போது ஏற்பட்ட வன்முறையில், பாதுகாப்பு படையினர் 14 பேர் உட்பட 62 பேர் உயிரிழந்தனர்.

2 ஆயிரத்து 300-க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்பின் தூண்டுதலால், இந்த போராட்டங்கள் நடைபெறுவதாக ஈரான் அரசு உயர் தலைவர் திரு. அயத்துல்லா அலி காமேனி குற்றம் சாட்டியுள்ளார்.

போராட்டக்காரர்கள் மீது ஈரான் அரசு வன்முறையை கட்டவிழ்த்து விட்டால், மிக கடுமையான விளைவுகள் ஏற்படும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.

>>>>>><<<<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார சட்டத்திற்கு விவசாய தொழிலாளர்கள் வரவேற்று தெரிவித்துள்ளனர்.

இந்த சட்டம், பணி நாட்களை அதிகரித்துள்ளதோடு, குறித்த நேரத்திற்குள் ஊதியத்தையும் உறுதிப்படுத்துவதாக உள்ளது என்று நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த பெண் விவசாய தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - பயனாளிகள் 42 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

*இந்தியா - அமெரிக்கா இடையே ஏராளமான வாய்ப்புகள் காத்திருப்பதாக இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் திரு. Serjio Gor தெரிவித்துள்ளார்.*

*சமூகவலைதளத்தில் இந்தக் கருத்தை பதிவிட்டுள்ள அவர், இந்தியாவுடன் பல்வேறு துறைகளில் ஒத்துழைத்து செயல்பட அமெரிக்கா ஆர்வம் கொண்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.*

*இந்தியாவுடனான உறவை மேலும் வலுப்படுத்தும் பொறுப்பு தமக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் திரு. Serjio Gor தெரிவித்தார்.*

*>>>>>><<<<<<*

*தைவானை கைப்பற்ற நினைக்கும் சீனாவின் முயற்சி, ஒரு போதும் வெற்றிபெறாது என்று தைவான் அதிபர் திரு. Lai Ching கூறியுள்ளார்.*

*தலைநகர் Taipei-யில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், நாட்டை பாதுகாப்பதற்கும். அனைத்து குடிமக்களின் உயிர் மற்றும் உடமைகளை பாதுகாப்பதற்கும் தமது அரசு உறுதிபூண்டுள்ளதாக தெரிவித்தார்.*

*தைவான் மீது சீனாவிற்கு அதிகாரம் இல்லை என்பதையும், தைவான் சீனக் குடியரசின் ஒரு பகுதி அல்ல என்றும் திரு. Lai Ching தெளிவுபடுத்தினார்.*

*>>>>>><<<<<<*

*மலேசிய ஓப்பன் பேட்மிண்டன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் பி.வி. சிந்து இன்று சீனாவின் Wang Zhi Yi-யை எதிர்கொள்கிறார்.*

*கோலாலம்பூரில், இப்போட்டி இன்னும் சற்று நேரத்தில் தொடங்கவுள்ளது.*

*>>>>>><<<<<<*

*மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில், பெங்களூரு அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் மும்பை அணியை வென்றது.*

*மும்பையில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், முதலில் விளையாடிய மும்பை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 154 ரன் எடுத்தது.*

*155 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய பெங்களூரு அணி 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 157 ரன் எடுத்து வெற்றிபெற்றது.*

*>>>>>><<<<<<*

*ஹாக்கி இந்தியா லீக் போட்டியில், நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் தமிழக அணி - SG Pipers அணியை வென்றது.*

*>>>>>><<<<<<*

*கபடி சாம்பியன் லீக் போட்டிகள் இம்மாதம் 25-ஆம் தேதி ஹரியானாவில் தொடங்கவுள்ளது.*

*அடுத்த மாதம் 7ஆம் தேதிவரை நடைபெறவுள்ள இப்போட்டியில் முன்னணி ஹாக்கி அணிகள் பங்கேற்கின்றன.*

***>>>>>>END<<<<<<***